# யோகவித்யா

## மெஸ்மெரிஸம்.

## YOGA VIDYA MESMERISAM.

இந்தப்புஸ்தகத்தில் யோகவித்தை, மெஸ்மெரிச அப்பியாசம், மெஸ்மெரிசக்கண்ணாடி செய்யும்விதம், மெஸ்மெரிச மோதிரம், டேபிள் சைன்ஸ், ஈஸ்வர தியானம் இவைகளடங்கி இருக்கின்றன.


## எம். ஜே. ஷர்மா.

அவர்களால் இயற்றியது.



இந்தப்புஸ்தகம் எம். ஜே. ஷர்மா அவர்களைத்தவிர மற்ற யாவரும் இதைக் காப்பி செய்யக்கூடாது அப்படிக்கு மீறி இயற்றினால் மேற்படியார் கூறிய நஷ்டத்திற்கு ஜவாப்தாரியாகவும்.



எம். ஜே. ஷர்மா அன் கோ.,

கணபதி அக்ராரம்,

தெற்காவணி மூலவீதி, மதுரை.



Registered copy right.



காப்பி 1000] முதலாம் பதிப்பு. [1-அணா

1918

அஷ்டலக்ஷ்மீ விலாசம் பிரஸ், மதுரை.

ஓம்.

# முகவுரை.

நமது இந்தியாவில் வசிஷ்டமகரிஷி வகையருக்களின் யோக வித்தைகளை நாளதுவரை ஒருவரும் கண்டுகொள்ளவில்லை. ஷை யோகவித்தையில் நூற்றுக்கு ஒருபாகத்துக்கும் குறைவாக மேஸ்மேரிசத்தைப் புகழாதவர்கள் ஒருவருமில்லை. ஷை விஷயத்தைக் கற்றுக்கொள்ளப் பிரியப்பட்டவர்கள் 10, 15–ரூபாய் செலவழித்து ஷை புஸ்தகம் வாங்கியும் குருவில்லாமல் தெரிந்துகொள்ள முடியவில்லை. யாவரும் எளிதில் உணரும்படி யோகவித்யா மேஸ்மேரிசம் என்ற புஸ்தகத்தில் டேபிள்டைசன்ஸ், மெஸ்மெரிசக்கண்ணாடி முதலிய விஷயங்கள் வெளியிடப்பட்டிருக்கிறது. வாங்கி வாசித்தால் உண்மை விளங்கும்.

ஷை மெஸ்மெரிசம் யோகவித்யா என்ற புஸ்தகம் ஒவ்வொருவரிடத்திலும் கைவசம் இருக்கவேண்டியது அவசியம்.

இந்த புஸ்தகத்தை ஜனங்களின் நன்மையை உத்தேசித்து மிகவும் குறைந்தவிலைக்கு விற்கப்படுகிறது.

விலை அணா 1 தான்.


எம். ஜே. ஷர்மா அன் கோ,
தெற்காவணி மூலவீதி,
கணபதி அக்ராரம்,
மதுரை

178546

22/133.4

# J. SHARMA & CO, MADURA.

## எம். ஜே ஷர்மா அன் கோ., மதுரை.



M. J. SHARMA.

வீட்டு வைத்தியர், ஈஸ்வர பிரார்த்தனை பஞ்சரத்தினம் 1ம் பாகம் 2ம் பாகம் ஆர்ய வைதிக் சந்தியாவர்த்தனம், யோக வித்தியா, மின்மரிசம் இந்த புஸ்தகங்கள் எம். ஜே. ஷர்மாவால் மொழி பெயர்க்கப்பட்டது.

M. J. SHARMA & CO., MADURA.

...த்யா.

...மை உண்டு அதை என்னல்
... யோகவித்தையை அப்பிப
...லங்களிலும் நடக்கும் சங்க
...கவித்தையின்மூலமாய் எவ்
...அறிந்துகொள்ளலாம் யோக
...ள் மீது கைபோட்டால் அந்த
...வித்தையை அறிந்தவன் எவ்
...தசெய்வார்கள் யோகவித்தை
...ம் கஷ்டம். ஒருவன் யோக
...ம்பித்தால் அதைப்பாகிபில்
...ப்பியாசம் பண்ணவேண்டும்
...டாது. ஆரம்பம்பண்ணினுல்
...விட்டால் லாபம்வராமல் நஷ்
...சான சங்கதியென்று நினைக்
...ளிலும் தேச சரித்திரங்களி
...ப்பாவில்மெஸ்மரிசமூலமாய்
...க்கிருர்கள். இதுஒரு பெரிய
...தயால் 100-க்கு ஒருபங்கு
...ஆச்சரியமான காரியம் செய்
...தை அறிந்துகொண்டால் எவ்
...லாம் என்று நீங்களே நினைத்
...ள யோகவித்தையில் 100-ல்
... முன்காலத்தில் மஹரிஷிக
...டய சாஸ்திரத்தில் 6-விதயோகம் சொல்லியிருக்கிறது அதா
...(1)மாரணம் (2) மோஹனம் (3)உட்சாடனம் (4) சுதர்ஷண
...) வசிகரணம் (6) ஸ்தம்பனம் நான் இந்தச்சிறுபுத்தகத்தில்
...ர்ஷணப்ரயோகத்தைப்பற்றி எழுதியிருக்கிறேன் உலகத்தில்
...லா பதார்த்தங்களைக்காட்டிலும் ஆகர்ஷணத்துமகிமை கொஞ்
...்ஜாஸ்தி இந்தச்சக்தியை சேர்த்துவைத்துக்கொண்டால் ஒரு
...னைக்காணுத வஸ்துவைக்காணும்படி செய்யலாம் எப்படி ஊசி

விலாசம்:—எம். ஜே ஷர்மா,

யானது காந்தக்கல்லைப்பிடிக்கிறதோ அதுபோல பெரிய புருவானது ஆகாயத்தில்பறக்கும்போது வளர்ப்பவன் என்ன ஆனந்தப் படுவானோ அதைப்போல் மேழநடக்கும் குஞ்சைப்பார்த்து ஆனந்தப்படுகிறான் ஆகர்ஷணசக்தி யோகாப்பியாசம் செய்தவனுக்கு உலகத்திலிருக்கும் பொருள்கள் வேண்டியதில்லை யோகாப்பியாசம் செய்வதற்கு மனச்சுத்தியாயிருக்கவேண்டும் மனதில் கபடம் டம்பம்ஒன்றுமிருக்கக்கூடாது யோகவித்தைக்குஇவைகள் முக்கியம் நாபமனதை ஆகர்ஷணமசெய்தால் நம் ஜீவாத்மா கடவுளை அடைகிறது ஒருவன் ஆகர்ஷணம் செய்தால் ஜீவாத்மா வெளியே போய் கடைசியில் என்னஇருக்கிறதோ அதை அடைகிறது ஒருவன் யோகாப்பியாசம் செய்பவேண்டுமானால் மனசை சுத்திசெய்யமுயலவேண்டும் மனதை ஒரே இடத்தில் நிலைநிறுத்தச் செய்வதுதான் யோகாப்பியாசம் செய்வதற்கு மனதை ஒரே இடத்தில் வைப்பதால் அது சுத்திஆகிறது யோகாப்பியாசம் செய்யவேண்டுமானால் ஆசாரமாயும் விவாஹம் சுத்தியாயிருக்கவேண்டும் சத்யமாயும் பிரியமான வார்த்தைகளைப் பேசிக்கொண்டிருக்கவேண்டும் மனதை எப்போதும் சந்தோஷமாய் வைத்துக்கொள்ள வேண்டும். யோகாப்பியாசத்தில் கவலைகளை ஒழித்துவிடவேண்டும். யோகாப்பியாசம் செய்யும்பொழுது கவலைவந்தால் யோகாப்பியாசம் கெட்டுப்போகும்

## அப்பியாசம்.

யோகாப்பியாசத்திற்கு தனிமையானஇடம் அவசியமானது நன்றாய்க்காற்றோட்டம் இருக்கவேண்டும் வாசனை திரவியங்கள் இருக்கவேண்டும்முதலில் ஒரு அட்டையில் வட்டம்போட்டுக் கொண்டு அதன்மததியில் ஒரு புள்ளிவைத்து அதைக்கவனமாகப் பார்க்கவேண்டும் அப்படிப்பார்க்கும்போது மனக்கவலை இருக்கக்கூடாது அதை நீ பார்க்கும்போது அந்தப்புள்ளியைத்தவிர மற்றொன்றையும் பார்க்கக்கூடாது. இம்மாதிரி தினம் அப்பியாசவிருத்தி பண்ணவேண்டும் நீங்கள் இப்படி கொஞ்சநாள் அப்பியாசம்செய்தால் உங்களுக்கு ஆகர்ஷணசக்திவந்துவிடும் ராத்திரி 12-மணிக்குமேல் சந்திரனை கண்கொட்டாமல் பார்த்துவந்தால் நல்ல ஆகர்ஷணசக்தி உண்டாகிறது நீங்கள் எவ்வளவுக்கெவ்வளவு ஆகர்ஷணசக்தியை விருத்திபண்ணுகிறீர்களோ அவ்வளவுக்கவ்வளவு யோகாப்பியாசம் லேசாய் அப்யாசம் பண்ணலாம். நமக்கு நம் திருஷ்டியால் ஆகர்ஷணசக்தி வந்துவிட்டது என்று தெரிந்தால் முதலில் யாராவது ஒரு 6-வயது அல்லது 7-வயது உள்ள சிறுவனை தனிமையான இடத்தில் கூட்டிக்கொண்டுபோய்

உட்காரச்செய்து தன்னுடைய திருஷ்டியைப் பார்க்கச்சொல்ல வேண்டும் மெஸ்மரைசர் எந்தக்குழந்தைமேல் அப்யாசம்பண்ணுகிறானோ அவ்விருவரும் ஒருவர் மற்றொருவர் திருஷ்டியை ஒரே மனதாய்ப் பார்க்கவேண்டும். இப்படி செய்யும்போது மெஸ்மரைசர் ஆகர்ஷணசக்தி அக்குழந்தையின்மேல்விழ அது தூங்கும் இதைப்பரீக்ஷிப்பதற்காக உடலின் மெதுவானபாகத்தில் ஊசியை குத்தவேண்டும். இந்தப்பரீக்ஷையானபிறகு இவன்நன்றாய் தூங்குகிறான் என்று தெரிந்தால் நீ உன் இஷ்டப்படி கேள்விகேள். அதற்கவன் சரியான உத்தரம் கொடுப்பான். இதைப்பார்த்து ஜனங்கள் ஆச்சரியப்படுவார்கள் தூங்குகிறவனுக்கு மூன்றுகாலத்தில் நடக்கும் சங்கதியை அறியக்கூடிய சக்தி உண்டு. பிறகு நல்ல ஜலத்தை அவன் முகத்தில் தெளிக்கவேண்டும். இப்படி செய்தால் அவன் எழுந்துவிடுவான். அவன் எழுந்தபிறகு யாராவது அவனை நான் உன்னை என்னகேட்டேன் என்று வினவினால் அவனுக்கு ஒன்றும்தெரியாது என்று சொல்வான் இதற்குக்காரணம் அவன்மூளை பழுத்ததில்லை நம்மூளை கட்டியாயிருப்பதால் அவன்மீது ஆகர்ஷணசக்தி சட்டென்றுதாக்குகிறது. ஆகர்ஷணசக்தி அவனுடைய நாக்கை ஞாபகமில்லாமல் செய்கிறது மெஸ்மரைசர் அவன்நாக்கை தன் வசப்படுத்துகிறான். ஆகையால்தான் கேட்கிறகேள்விக்கு சரியானபதில் சொல்லுகிறான். யார்மேல் அப்பியாசம் பண்ணுகிறார்களோ அவர்கள்மீது அப்பியாசத்தைப் பண்ணவேண்டும் இப்படிசெய்வதால் அவன் ஜீவாத்மா தன் வசமாகும். அப்பியாசம் ஒருவனையே பண்ணவேண்டும் விருத்தி பண்ணவேண்டும். ஒருவனை விட்டுவிட்டு மற்றொருவனை அப்பியாசம் செய்தால் சக்தி கெட்டுப்போகும். இந்த அப்பியாசம் மனைவிமேல்செய்தால் மிகவும் நல்லது ஏனென்றால் மனைவியானவள் புருஷனிடத்தில் பிரியமாயிருப்பார்கள். மெஸ்மரிஸ்ட்யாரை மெஸ்மர் பண்ணுகிறானோ அவன் நல்ல அழகுள்ளவனாயிருக்கவேண்டும் அப்படியிருந்தால் அப்பியாசம் சுலபமாயிருக்கும்

(Table Science டேபில் ஸயின்ஸ் )

மேஜையின் பேரில் ஜீவாத்மாவரும் விதம்:—

மேல்சொன்னதும் மெஸ்மரிசம் சம்மந்தப்பட்டது. நான் அதற்காக டேபில் ஸயின்ஸ் மாத்திரம் சொல்லுகிறேன் முதலில் மிகவும் ஆசாரமாய் இருக்கிறவர்கள் சேர்ந்து இதைக்கற்றுக்கொள்ளவேண்டுமென்று ஆசைப்படவேண்டும். முதலில் மரத்தால் ஒரு ரவுண்டுமேஜை தயார் செய்யவேண்டும் அதற்கு 3கால்கள் இருக்கவேண்டும் பிரயோகம் செய்ய மேல்ச்சொன்ன மேஜை

அவசியம். முதல்பாகத்தில் கூறியபடி ஏகாந்த இடம்வேண்டும் மனக்கபடமில்லாமல் இருக்கவேண்டும் நிரம்ப சுத்தமாய் இருக்கவேண்டும் இந்தப் ப்ரயோகத்தில் முன்பாகத்தில் கூறியவற்றைமனதில் ஞாபகம் வைத்துக்கொண்டு அதன்படி நடக்கவேண்டும் டேபில் ஸயின்ஸ் செய்யப்பட்ட சபையில் ஒருவர் சித்தி அடைந்தவர் மற்றவர்கள் சபையோர்கள்

(ப்ரயோகம்) (அப்யாசம்)

ஒரு சுத்த வாசனைகளோடு கூடியதனி அறையில் மேற்சொன்ன மேஜையின் ஸயின்ஸ் கற்கப்பிரியமுள்ளவர்கள் நாலு பக்கங்களிலும் உட்கார்ந்து ஒவ்வொருவரும் தங்கள் இருகைகளையும் சேர்த்து மேஜையின்பேரில் வைக்கவேண்டும் ஒருவருடைய கைகள் மற்றவர்களுடைய கைகளோடுகூடி இருக்கவேண்டும். ஒட்டி இருக்கவேண்டும் கைகள் ஒன்றுக்கொன்று ஒட்டாவிட்டால் ப்ரயோகம் சித்திக்காது (சித்திசபையின் பக்தியிலும் உட்காரலாம் தனியாயும் உட்காரலாம் தனியாய் உட்கார்ந்தால் மிகவும் நலம். அவர்கள் எந்த ஜீவாத்மாவைக் கொண்டு வரவேண்டுமென்று நினைக்கிறார்களோ அதை நினைத்து ஈஸ்வரனை த்யானம் செய்யவேண்டும் (பஞ்சம காயக்யவிதி 39 பக்கம்) அரைமணி நேரம் கழித்து சித்தி) மேஜையை நிமிர்ந்து பார்த்து இந்தமேஜையில் ஜீவாத்மா வந்திருந்தால் அதன் ஒருகால் தூக்கவேண்டும் என்று சொல்லவேண்டும் கால் தூக்காவிட்டால் மறுபடியும் ஈஸ்வரனை த்யானம் பண்ணவேண்டும் (15-நிமிஷம்) கிளம்பாவிட்டால் அப்யாசம் அன்று விட்டு விடவேண்டும் இரண்டாவது நாள் அதே நேரத்தில் மறுபடியும் செய்யவேண்டும் இப்படி 6 தினங்கள் செய்யவேண்டும் இப்படி செய்து 7வது தினம் கால் கட்டாயம் தூக்கும் சர்வசக்தியுடைய சர்வகுணசம்பன்னராயுள்ள பரமேஸ்வரர் நாம் சிரமமெடுத்துக்கொண்டு செய்கிறகார்யத்தை வ்யர்த்தமாக்குகிறதில்லை அந்த கால் வாரா மேஜையின்பேரில் ஜீவாத்மா இருக்கிறது என்று சித்திக்கு நிச்சயமாய்த் தெரிகிறது. உடனே அதை நமஸ்காரம் செய்து பிறகு அதோடு பேசத் தொடங்கவேண்டும் எந்தபாஷை பேசக்கூடிய ஜீவாத்மா அங்கிருக்கிறதென்று அறிந்துகொண்டு அந்தபாஷையில் கேள்விகள் கேட்கவேண்டும் நாம் எந்தபாஷை பேசும்போது கால் இப்படி தூக்குகிறதோ அந்த பாஷையில் பேசவேண்டும் பிறகு அவர்பேர் முதலியவை கேட்கவேண்டும். பேர் கேட்கும் விதம் பின்வருமாறு அந்த பாஷை அக்ஷரங்களை உச்சரிக்கவும். எந்த அக்ஷரம் உச்சரிக்கும்போது கால் எழுந்திருக்கிறதோ அதை ஒருகாகிதத்தில் எழுத

வும் இதேமாதிரி மறுபடி மறுபடி உச்சரிக்கவும் இதேமாதிரி அ
தன்பேர் ஊர்தெரியும் மனதில் நினைத்த கேள்விக்கு விடைகொடு
க்கும் இந்த அப்யாசத்தை நிதம் செய்யவேண்டும் இப்படிச்செ
ய்வதால் ஜீவாத்மாவுக்குப் பிரியமுண்டாகிறது மறுபடி கார்யம்
ஆரம்பித்தவுடனே டேபிள்மேல் வரும்.

## மெஸ்மெரிச கண்ணாடி.

மெஸ்மெரிசம் கண்ணாடி என்பது முகம்பார்க்கும் கண்ணாடி
இதுசக்ரமாக இருக்கும் ஆங்கிலேயபாஷையில் கிரிஸ்டல்கிளாஸ்
[ Crystal glass ] என்று பெயர் ஏறக்குறைய ¾ இஞ்சுக்கனமிருக்
கும் இங்கிலாண்டு அமெரிக்கா முதலிய தேசங்களில் இந்தமாதிரி
கண்ணாடி தயார்செய்து ஆச்சரியமான கண்ணாடியென்றும் அபூ
ர்வமானசண்ணாடி யென்றும் அதிகவிலைக்கு விற்கிறார்கள இதற்
குசக்திக்கண்ணாடி என்றும் பெயர் முன்காலத்தில் ஜாமஜ்பஷே
த் என்றபாதுஷா ஒருகண்ணாடிக்கிண்ணம் வைத்திருந்தார் அவர்
அதில் தண்ணீர் போட்டுவிட்டு பார்ப்பது வழக்கம். அப்படிப்
பார்த்தால் உலகத்தில் நடக்கும் சங்கதிகள் தெரியுமாம் அந்தசம
யம் அவருக்கு யோக தத்துவங்கள் தெரியுமாம் அதில்ஆகர்ஷண
சக்தி உண்டாகிறது இதே மாதிரி ஒரு மனிதன் மெஸ்மெரிசம்
மேல்சொன்னபடி சித்தி செய்தபிறகு இது செய்தால் அவனு
க்கும் எல்லாம் தெரியும் மேற்சொன்ன வட்டமான கண்ணா
டியை அவன் உற்றுப் பார்ப்பதனால் மயக்கம் வரும் அப்பொழு
து கட்டுப்பட்டு இருந்த ஜீவாத்மா உலகம் முழுவதும் சுற்றுகி
றது அதனால அவனுக்கு எல்லாம் தெரிகிறது இதுமாதிரியாக
வே இந்த பாதுஷா செய்துவந்தார்

தண்ணீருக்குள் ஆகர்ஷணசக்தி போகிறது ஆகையால் அவனுக்கு
உலகநடவடிக்கைகள் தெரிகிறதில்லை ஆனால் அவன் தூங்குகிறதுமில்லை
நேத்ரம்மூடியிருக்காது. மெஸ்மெரிஸம் யோகாப்யாசம் தெரிந்தவர்களுக்
கு அதுசீக்கிரம்வரும் இதற்கு கெட்டிக்கண்ணாடி வேண்டும் மற்றொன்றும்
கூடாது நேத்ரம் ஒரே நிதானமாக ஆனதும மனது ஒருநிலையாகிறது. ஜீ
வாத்மா மனதோடு சேர்கிறது. நாமஎதைநினைத்துக்கொண்டு இதை செய்
கிறோமோ அது தெரியும் பார்க்கும் சமயம் வேறுயாராவது கேள்விகள்
கேட்டால் அதற்கும் பார்க்கிறவர் பதில்சொல்லலாம் இந்தக்கண்ணாடிக்
கு வட்டம்பிரமாணம்இல்லை எவ்வளவு பெரிதாகயிருந்தாலும் இருக்கலாம்

## மெஸ்மரிச மோதிரம்.

வெள்ளி, தங்கப், பொன், இன்னும் அநேகவிதமான உலோகத்
தினாலும் மோதிரத்தை செய்துகொள்ளலாம் அதன் முகப்பில்
ஒரு கடலைப்பருமன் பள்ளமாயிருக்கவேண்டும் அதற்குள் அடி

யில் சொல்லியிருக்கிற மருந்தை வைத்துவிடவேண்டும் அல்கதார சியாத்த ஒரு தோலாவும் இறந்துபோன மனிதனுடைய பிணத்தில் வேகும் விறகினுடைய கரி $\frac{1}{4}$தோலா நாகத்தின் சட்டையில் $\frac{1}{4}$தோலா இந்தமூன்றுசாமான்களை ஒன்றுசேர்த்து கொஞ்சநேரம் அடுப்பில் வைத்துக்காய்ச்சி மோதிரத்தின்முகப்பிலுள்ள பள்ளத்தில் வைத்துவிடவேண்டும் 10-வயதிற்கு உள்பட்ட ஆண்பிள்ளைகளிடத்திலும் 70வயதிற்குட்பட்ட பெண்பிள்ளைகளிடத்திலும் கொடுத்துசம்பங்கி எண்ணையை கொஞ்சம் அந்த மோதிர முகப்பில் விட்டு அதை பார்க்கும் பக்ஷத்தில் இறந்துபோன மாதா பிதா சிநேகிதர் இன்னும் அநேகரைப் பார்க்கலாம். இந்தமோதிரத்தை கொடுக்குமுன் கீழ்ச்சொல்லிய [ஈஸ்வர தியானம்] செய்யவேண்டும்

ஓம்

## ஈஷ்வர தியானம்.

1. மந்திரம்—ஓம். விச்வானி, தேவ, சவிதர், துரிதானி, பராசுவ, யத்பதரம் தன்னஆஸுவ, (யஜுர்வேதம் அத்யாயம் 30 மந்திரம் 3-வது)

அர்த்தம்—இந்த உலகத்தையெல்லாம் படைத்த ஈசனே! எல்லா ஐசுவரியமும் உன்கைக்குள் இருக்கிறது. நீர் சுத்தமான ஸ்வரூப முடையவர் எல்லா ஜகத்தையும் கொடுக்கப்பட்டவராயுள்ள பரமேஸ்வரா! நீங்கள் தயைகூர்ந்து எங்களுடைய எல்லா துர்க்குணங்களையும் விலக்குவீராக எனக்கு சுகத்தைக்கொடுக்கக்கூடிய நல்லகுணங்களையும் நல்லபதார்த்தங்களையும் நல்லசுபாவங்களையும் கொடுப்பீராக.

2. மந்திரம்—ஓம் ஹிரண்யகர்ப்ப: சம்வர்த்ததாக்ரே பூதஸ்யஜாத: பதிரேக, ஆஸீத், சதாதார, ப்ரதிவீம், த்யாமுதேமாம், கஸ்மை, தேவாய, ஹவிஷா, விதேம (யஜுர்வேதம் 13 அத்யாயம் 4-வது மந்திரம்.)

அர்த்தம்—அந்த ஸ்வயப்பிரகாசரான கடவுள் உலகத்தைப் பிரகாசப்படுத்தும்பொருட்டு சூர்ய சந்திர முதலியவற்றை உற்பத்திசெய்துவிட்டு அதற்கு அவர் ஆதாரமாக இருக்கிறார். இந்த ஜகத்தை உண்டுபண்ணி அதற்கு ப்ரக்யாதியாகி யிருப்பவர். அக்கடவுள் இந்த ஜகத் உர்பத்தி ஆவதற்கு முன்னாலேயே இருக்கிறார். அவர் சூர்ய சந்திராதிகளை நிலைநிறுத்தி யிருக்கிறார் நம் ஜனங்கள் சுகஸ்வரூபராகிய அந்த சுத்த பரமாத்மாவை க்ரஹணம் பண்ணுவதற்குயோகாப்யாசம் பிரியத்தோடும் பக்தியோடும் செய்யவேண்டும்.

3 மந்திரம்—யஆத்மா, பல்தாயஸ்யவிச்வ உபாசதேப்ரசிம ஸ்யதேவா, யஸ்யசயாயாம்ருதம், யஸ்யம்ருத்யு: கஸ்மை,தேவாய ஹவிஷாம்விதேம், யஜுர்வேதம் அத்யாயம் 25 மந்திரம்81வது

அர்த்தம்—அந்த ஆத்மக்ஞானத்தை கொடுக்கிறவரும் நம்சரீரம் ஆத்மா இவைகளுக்கு விர்த்தி பண்ணுகிறார். அவருக்கு எல்லா வித்வான்களும் பூஜை செய்சிறார்கள் இன்னும் அவர்கள் அந்த ஸத்யஸ்வரூபராயும் நீடித்திருப்பவரும் இன்னும் நியாயதர்த்தாராயும் இருக்கிற ஈஸ்வரனுடைய ஆக்ஞையைப் பணிகிறார்கள். அவரை ஆஸ்ரயிக்கிறவர்களுக்கு மோக்ஷம் கொடுப்பார். அப்படி அவருடைய சட்டளைப்படி நடவாமல் இருந்தாலும் அவரை அந்தரங்க பக்தியோடு பூஜிக்காவிட்டால் அழிவிற்கும் கஷ்டத்திற்கும் காரணம் ஆகும் நாம் சுகஸ்வரூபராயும் ஆத்மஞானத்தைக் கொடுக்கிறவருயும் இருக்கிற ஈஸ்வரனுடைய பாதாரவிந்தத்தைச்சேரவேண்டும் என்று நிரம்ப நியமத்தோடும் பக்தியோடும் அவர்கட்டளைகளை நிறைவேற்ற ஆயத்தமாய் இருக்கவேண்டும்

4 மந்திரம்—யப்ராணிதோ நிமிஷிதோ,மகித்வைக.யத்ராஜ ஜெகதோபபூவ யஈசே, அஸ்ய, த்விபதஸ்சதுஸ்பத, கஸ்மை தேவாயஹ, விஷாம்விதேம், (யஜுர்வேதம் அத்யாயம் 23.மந்திரம் 3.

அர்த்தம்—அந்த ஈஸ்வரன் சேதனவஸ்துக்களும் அசேதன வஸ்துக்களும் நிறைந்துள்ள இந்த ஜெகத்தில் அனந்தகுணமகிமையுள்ளவராயும் எல்லாருக்கும் ஒரே ராஜாவாகவும் பிரகாசிக்கிறார். அவர் மனுஷ்யர்களையும் பசுக்களையும் சம்ரக்ஷிக்கிறார் நாம் அப்பேர்ப்பட்ட சுகஸ்வரூபமான சகல ஐஸ்வரியங்களையும் கொடுக்கிறவராய் இருக்கிற பரமேஸ்வரனை நல்ல வஸ்துக்களைக்கொண்டு முழுமனதுடன் பூஜை செய்யவேண்டும்.

5. மந்திரம்—ஏகத்தியௌ, ருக்ராப்ருதிவீச, த்ரிடாஏனஸ் ஸதபிதம், ஏனனுகயோ: அந்தரிக்ஷோரஜஸோ விமானக: கஸ்மை தேவாயஹவிஷாம்விதேம்[யஜுர்வேதம் அத்யாயம்32 மந்திரம்6

அர்த்தம்—அந்த ஈஸ்வரன் சூர்யாதிகளையும் பூமியையும் தாரணம் செய்கிறார் அந்த ஜெகதீஸ்வரன் சுகத்தைக்கொடுத்தும் துக்கத்தை விலக்கி மோக்ஷத்தைக்கொடுக்க வல்லமையுள்ளவர் அவர் எல்லா லோகலோகாந்தரங்களையும் விசேஷமான புத்தியினால் (ஆகாசத்தில் பக்ஷிகள் பறப்பதுபோல்) ஸ்ருஷ்டித்து அவர்களை சற்றும்படி செய்கிறார். நமக்கு சுகத்தைக்கொடுக்க பரமாத்மா பாதாரவிந்தத்தை அடைவதற்காக முழு பக்தியோடும் பூஜைசெய்யவேண்டும்.

17546



X.87

6. மந்திரம்—ப்ரஜாபதேனத்வதே, தானன்யோ விஸ்வா ஜாதானி பரிதாபபூவ, யத்காமாஸ்தே, ஜுஹுமஸ்தன்னோ, அஸ்துவயம், ஸ்யாம்பதயோ, ரயீணும், [ரிக்குவேதம் மண்டல் 10சூத்தரம் 121. மந்திரம் 10.]

அர்த்தம்—எல்லா பிரஜைகளுக்கும் சுவாமியே பரமாத்மா! உங்களைத்தவிர ஜடபதார்த்தமாவது ஜீவனுடையபதார்த்தமாவது ஒன்றில்லை தங்களை திரஸ்கரிக்கிரவஸ்து ஒன்றும்இல்லை எல்லாவற்றிற்கும்மேல் நீங்கள்தான் நான் எந்தெந்தபதார்த்தங்களை இச்சிக்கிறேனே எதைமனதில் நினைக்கிறேனே அவைகளைநிறைவேற்றிவைக்கவேண்டும். நான் எல்லாஐஸ்வரியத்துக்கும் ஸ்வாமிஆவேன்

7. மந்திரம்—ஸனோ பந்துர்ஜனிதாஸ, விதாதாதாமானி, வேதபுவனானி விஸ்வா:யத்ரதேவ அம்ரதமானஸானஸ்திரிதியே, தாமனத்திபையரயந்த (யஜுர்வேதம் அத்தியாயம்32 மந்திரம்10

அர்த்தம்—அந்த ஈஸ்வரன் நம்ஜனங்களுக்கு சகோதரருக்கு சமானம் அவர் சுகத்தைகொடுக்கிறார். எல்லாஜகத்தையும் உற்பத்திசெய்கிறவர். எல்லாவேலையும் பூர்ணம் செய்கிறவர். அவர் நாமம், ஸ்தானம், ஜன்மம், எல்லாவற்றையும் அறிகிறார். இன்னும் இந்த சம்சார சுகத்தைவிட்டு நித்யமாகிய மோக்ஷரூபத்தை தரிக்கிறார் அப்பேர்ப்பட்ட பரமேஸ்வரனை மோக்ஷத்தைக்கொடுக்கும்படி வித்வான்கள் பூஜை செய்கிறார்கள் அந்தபரமாத்மா நம்முடைய ஆசாரியர் அரசன். நியாயாதிபதி. நாம் எப்போதும் அவரிடத்தில் பக்தியுள்ளவர்களாயிருக்கவேண்டும்.

8 மந்திரம்—அக்னேநய ஸுபதாராயே அஸ்மான் விஸ்வானி தேவவயுனானி வித்வான் யுயோத்யஸ் மஜ்ஜுஹுராணமேனோ, புயிஸ்டாம்தே, நம, உத்திம்விதேம (யஜுர்வேதம் அத்தியாயம் 40. மந்திரம் 16)

அர்த்தம்—ஏ சுயம்பிரகாசா, ஞானஸ்வரூபா, நீர் எல்லா ஜகத்திற்கும் பிரகாசத்தைக் கொடுக்கிறீர். எல்லாசுகத்தையும் கொடுக்கிற பரமேஸ்வரா! உங்களிடத்தில் எல்லாவித்தையும் இருக்கிறது தயவுசெய்து எங்களுக்கு ஞானமுண்டாக்கி ராஜ்யத்தையும் ஐஸ்வரியத்தையும் அடையச்செய்யுங்கள். நல்ல தர்மமுடைய மகான்கள் மூலமாய் முழுபாக ஞானத்தையும் நல்ல கர்மங்களையும் அடையச்செய்யுங்கள் மேலும் எங்களுடைய கெட்டகர்மங்களையும் துர்எண்ணங்களையும் விலக்குங்கள் இதற்காகநாங்கள் அநேகவிதமான ஸ்துதிகளால் உம்மை வணங்கி எப்போதும் ஆனந்தத்தோடு பூஜை செய்கிறோம் (ஸமஸ்கிருத பாஷையின் மந்திரங்கள் தமிழில்ஸ்பஸ்டமாய்வாராது, இதில் பிழையேதேனுமிருந்தால் மன்னிக்குமாறு கோருகிறேன் )

# ஆரிய சமாஜத்தின் நியமங்கள்.

1. சகலவிதமான சத்திய வித்தைகளும் இந்தச் சத்தியவித்தைகளால் அறியப்படும் வஸ்துக்களும் இவைகள் எல்லாவற்றிற்கும் முதற்காரணமாயும் எப்பொழுதும் ஆதாரமாயும் அமைந்தவர் பரமேசுவரர்.

2 ஈசுவரர் சச்சிதானந்த சொரூபர் சர்வேசுவரர் சர்வவியாபகர் சர்வாந்தரியாமி சிருஷ்டிகர்த்தர் அநந்தர் அநாதி தனக்குவமையிலாதவர் விர்த்தாபபியம் இல்லாதவர் நிர்ப்பயர் நியாயாதிபரசித்தியர் நிர்விகாரர் பவித்திரர் கிருபாகரர் என்று சொல்லப்படுகிறதினால் அவரையே நேசித்துப் பூசித்தல்வேண்டும்

3 வேதம்என்பது சகலவிதமான சத்திய வித்தைகள் அடங்கிய புஸ்தகம்

4. எப்பொழுதும்எல்லாரும்சத்தியத்தை கைக்கொள்ளவும் அசத்தியத்தை விட்டுவிடவும் சித்தமாயிருத்தல் வேண்டும்.

5. எல்லாரும் எல்லா காரியங்களையும் தருமாநுசாரமாகக் கொண்டு சத்தியாசத்தியத்தை பகுத்தறிந்து செய்தல்வேண்டும்

6. உலோபகாரமென்றால் சரீர சம்மந்தத்திற்கும் ஆத்ம சம்மந்தத்திற்கும் சங்கத்தினுடைய கூட்டுறவுக்கும் தக்க நன்மைகளை ஒற்றுசசெய்வதே ஆரிய சமாஜத்தின் சிறந்த சிந்தனையாம்.

7. எல்லோரிடத்திலும் நிறைந்த அன்போடு கூடித் தருமாநுசாரமாயும் அவரவர்களுடைய ஸ்திதிக்குத்தக்கவாறு நன்கு நடந்துகொள்ளல் வேண்டும்

8 அறியாமை அகல ஓட்டி அறிவைப் பரவச்செய்தல் வேண்டும்.

9: ஒவ்வொருவரும் தங்கள் தங்களுடைய நிலைமையிலே மாத்திரம் சந்தோஷம் அடையாமல் பிறரையும் தங்களைப்போலாக்கி சந்தோஷம் அடைதல்வேண்டும்.

10. நன்மையைத்தருகிற இந்தச் சமாஜத்தினுடைய கோட்பாடுகளுக்கு ஒவ்வொருவரும் உட்பட்டு நடத்தல்வேண்டும். இக்கோட்பாடுகளுக்கு அநுகூலமான மற்றைய நன்மைகளையும் கைக்கொள்ளுவது ஆட்சேபணைக் குறியதன்று.

எம். ஜே. ஷர்மா ஆரிய தர்ம பிரசங்கர்,

தெற்காவணிமூலவீதி மதுரை.

ஓம்:

# வீட்டுவைத்தியர்,

## வைத்திய வித்யா.

---

**தென் இந்தியா நேயர்களே இதோ பாருங்கள்:—**

இந்தப் புஸ்தகம் அடியேன் ஜனங்களின் நன்மைக்காகவும் திரேகபலத்திற்காகவும், ஓர்பெரும் உதவியாகும்பொருட்டு நான் பூர்ண மனத்தோடு வெளியிட்டிருக்கிறேன். ஏனெனில் இத்தென்னாட்டின்கண் கையில் வெண்ணையை வைத்து நெய்க்கு அலைவதுபோல் தன்வீட்டு மருந்துகள் தெரியாமல் நூற்றுக் கணக்கான ரூபாய் செலவுசெய்து அநேகர் மருந்து சாப்பிடுகிறார்கள். அதனால் இப்புஸ்தகம் எல்லாரிடத்திலுமிருந்தால் இதில் உள்ளபடி வீட்டில் அடிக்கடி உபயோகிக்கிற சுக்கு, திப்பிலி, மிளகாய், உப்பு, புளி, கொத்தமல்லி, ஓமம், வெங்காயம், பெருங்காயம் வெள்ளைபூண்டு, கிராம்பு, சீரகம், விளக்கெண்ணை, இஞ்சி, கடுக்காய், மிளகு, நல்லெண்ணை முதலியவைகளால் எந்தவியாதி வந்தபோதிலும் சூரியனைக்கண்டபனி விலகுவதுபோல் உடனே நீங்கும்படி செய்யலாம்.

தேள்கடி மந்திரம் நல்லவித மருந்து, பாம்புகடி மருந்து குழந்தைகளுக்கு மருந்து முதலியவைகளும், பேய்ஓட்டும் மந்திரங்களும், தந்திரங்களும் இச்சிறு புஸ்தகத்தில் அடங்கியிருக்கிறது இச்சிறு புஸ்தகத்தைப்பாடம் செய்துகொண்டால் தங்கள் ஜீவனத்திற்கு உதவியாகும், தாங்கள் இப்புஸ்தகத்தின் உதவியால். நன்மையடைந்தால் என்னுடையபெயரைப் பிறருக்கும் சொல்லவும்.

அடியிற்கண்ட விலாசத்தில் ஷை புஸ்தகம் பெற்றுக்கொள்ளலாம்

புஸ்தகத்தின் விலை அணா 0—3—0

**ஏம். ஜே. ஷர்மா, அன் கோ,**

**கணபதி அக்ராரம்,**

**தெற்காவணி மூலவீதி,**

**மதுரை.**